2002 மே 2]

தெரு விளக்குகளை அணைப்பதற்கு வேண்டிய உத்தரவு ஏற்கெனவே இருக்கிறது. அதை மீறுகின்ற ஒருசில பொறுப்பற்ற ஊழியர்களும் இன்னும் பணியிலே இருக்கிறார்கள். அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முன்வரும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிமன்ற நிதியை நீண்டகாலமாக அனுப்பாமல் இருந்ததன் காரணமாக பல்வேறு ஊராட்சிகளிலே, பஞ்சாயத்து அலுவலகம், தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆகியவற்றுக்கு எல்லாம் இன்றைக்கு மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்த டெபாசிட் கட்டினால்தான் இணைப்பு கொடுக்கப்படும் என்று இன்றைக்குப் பல கிராமங்களிலே அவையெல்லாம் செயல்படாமல் இருக்கின்றன. ஆகவே இப்படிப் பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கப்படுகிற நிதிகளை உடனுக்குடன் வழங்க அரசு முன்வருமா? மின்சார வாரியம் மீண்டும் டெபாசிட் கேட்காமல் இருக்கக்கூடிய நிலையை உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நல்ல கருத்துரைகளையெல்லாம் இந்த அரசு சிந்தித்துதான் ஒவ்வொரு மாதமும் ஒவ்வோர் ஊராட்சிக்கும் மாநில நிதியை விடுவிப்பதற்கு வேண்டிய நல்ல முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. எனவே வருங்காலங்களில் இப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் தவிர்ப்பதற்காகத்தான் இந்த அரசு நல்ல முயற்சியை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் எந்த ஊராட்சியில் மின் துண்டிப்பு செய்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அது தொடர்பான ஊராட்சிக்கு, நிதி பற்றாக்குறையா அல்லது வேறு காரணமா என்பதைத் தெரிந்து தக்க அறிவுரை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 266, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

[2002 மே 2

266—

புதிய கட்டடம்

***6034—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், திருவத்தேவன் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

முற்பகல் 10-25

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, திருவத்தேவன் ஊராட்சியில் அரசு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்கப்பட்டு ஏறக்குறைய 25 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 25 ஆண்டுகளும் அது வாடகைக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டு இருக்கின்றன. அங்கே சொந்தக் கட்டடம் கட்ட வேண்டும் என்று அதற்குரிய இடங்கள்கூட அந்தக் கிராமத்தால் வழங்கப்பட்டு இருக்கின்றன. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்த நிதியாண்டிலேயே அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்ட ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருவத்தேவன் வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடர்ந்து நஷ்டத்திலே இயங்கிக்கொண்டு இருக்கிறது. அது லாபத்திலே இயங்குகிறபோது அதற்குப் புதிய கட்டடம் கட்டுவது

2002 மே 2]

பற்றிய புதிய முன்மொழிவுகளை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 267, திரு. ஜி.கே. மணி, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

267—

அரசு அச்சகம்

***2662—திரு. ஜி.கே. மணி:**
திரு. ஐ. கணேசன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மைய அச்சகத்தில் போதிய பணியாளர்களை உடனடியாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு மைய அச்சகத்தில் போதுமான பணியாளர்கள் உள்ளனர்.

(ஆ) இவ்வினா தற்போது எழவில்லை.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய அரசாங்கத்தினுடைய மத்திய அச்சகத்திலே போதிய பணியாளர்கள் இல்லை. அது மாத்திரம் அல்ல. அங்கே இருக்கக்கூடிய அச்சு இயந்திரங்கள் எல்லாம் பழைய இயந்திரங்கள். அவை பழுதுபட்டும், சரிவர பழுதுபார்க்கப்படாத நிலையிலேயும் இருந்துகொண்டு இருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய கணினிகூட பழைய கணினி. இப்போது நவீன முறையான கணினிகள் எல்லாம் வந்துவிட்ட காரணத்தினாலே, அவற்றை எல்லாம் பழுதுபார்க்க முடியாமல், நவீனமயமாக்க முடியாமல், பணியாளர்கள் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினாலே பணிகள் எல்லாம் தொய்வாக இருக்கின்றன.